# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 01/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.13

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பூமிநாதன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 21st day of August, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றிவருகிறன். கடந்த 02.04.2018 ம் தேதி காலை 8.00 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை சுந்தரலிங்கபுரத்தை சேர்ந்த தவமணி என்பவரின் மகன் திரு.சோமசுந்தரன் என்பவர் என் முன்பாக ஆஜராகி அருப்புக்கோட்டையை சேர்ந்த முதல் நிலை ஒப்பந்ததாரர் திரு.K.S. சுப்பாரெட்டியார் என்பவரிடம் வேலை செய்வதாகவும், மேற்படி சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை நகராட்சியில் செய்யக்கூடிய ஒப்பந்தபணி தொடர்புடைய வேலைகளை செய்ய உதவியாக இருப்பதாகவும், மேற்படி நகராட்சியில் ஒப்பந்த பணி முடித்து ஒப்பந்ததாரருக்கு பிடித்தம் தொகை போக வழங்கக்கூடிய காசோலைகளை ஒப்பந்ததாரர் சார்பாக பெறுவதாகவும், காசோலைகளை பெற்றபின்பு ஒப்பந்ததாரர் நகராட்சிக்கு வந்து நகராட்சி ஆவணங்களில் குறிப்பாக காசோலையின் அடிக்கட்டை உட்பட உள்ள ஆவணங்களில் கையொப்பம் இட்டு செல்வதாகவும், அவ்வாறு கடந்த 3

வருடங்களுக்கு முன்பு அருப்புக்கோட்டை நகராட்சியில் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் நேதாஜி மயான சாலை அமைக்கும் பணியை செய்ததாகவும், அந்த பணிக்குரிய தொகையை பிடித்தம் தொகை போக மீதித்தொகையை நகராட்சியிலிருந்து இரண்டு காசோலைகளாக வழங்கியதாகவும், அதன்பின்னர் அவரது உரிமையாளர் நகராட்சிக்கு வந்து நகராட்சி ஆவணங்களில் கையொப்பம் இட்டு சென்றதாகவும், அவ்வாறு மேற்படி பணியில் பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத தொகையான கூடுதல் காப்புத் தொகையை கேட்டு அவரது உரிமையாளர் திரு.சுப்பாரெட்டியார் பெயரில் 4 மாதங்களுக்கு முன்பு அருப்புக்கோட்டை நகராட்சியில் விண்ணப்பம் கொடுத்ததாகவும், அந்த விண்ணப்பம் தொடர்பாக கடந்த 22.03.2018 ம் தேதி காலை 10.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று அங்கு கணக்கராக பணிபுரியும் 2 ம் எதிரி திரு. தியாகராஜன் என்பவரை சந்தித்து கேட்டதாகவும், அப்போது மேற்படி தியாகராஜன் அவர்கள் நகராட்சி பொறியாளராகவும், பொறுப்பு நகராட்சி ஆணையாளராகவும் பணிபுரியும் திரு.முத்து அவர்களிடம் கேட்டுக்கொள்ளும்படி கூறியதாகவும், ஆகையால் அன்று மதியம் 1.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று நகராட்சி பொறியாளர் அலுவலகத்தில் வைத்து 1 ம் எதிரி திரு.முத்து அவர்களை சந்தித்து , மேற்படி 5 சதவீத கூடுதல் காப்புத் தொகை கேட்டு கொடுத்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டதாகவும், அப்போது அவர் அவரது உரிமையாளரை எங்கே என்று கேட்டுவிட்டு ரூ. 28000/- கொண்டுவந்து கொடுத்தால் தான் உங்களது உரிமையாளரின் பெயரில் வழங்கக்கூடிய 5 சதவீத கூடுதல் காப்புத்தொகையான ரூ. 3,74,765/- யை காசோலையாக தயார் செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியதாகவும், உடனே வாதி உரிமையாளரிடம் கேட்டுவிட்டு வருவதாக கூறி வந்துவிட்டதாகவும், பின்னர் இந்த தகவலை அவரது உரிமையாளர் திரு.சுப்பாரெட்டியிடம் கேட்டபோது அவ்வளவு பணம் எதற்கு கொடுக்கவேண்டும் அவ்வளவு பணம் கொடுப்பதற்கு நாம் என்ன செய்வது

என்று சொல்லிவிட்டு, நீங்களே திரும்ப ஒரு தடவை சென்று நகராட்சி ஆணையாளர் பொறுப்பு வகிக்கும் நகராட்சி பொறியாளரை சந்தித்து சொல்லுங்கள் என்று கூறியதாகவும், ஆகையால் அவர் திரும்ப 28.03.2018ம் தேதி மாலை 6.00 மணிக்கு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று நகராட்சி பொறியாளர் அலுவலகத்தில் வைத்து 1ம் எதிரி திரு.முத்து அவர்களை சந்தித்து அவரது உரிமையாளர் சொன்ன தகவலை சொல்லி, நீங்கள் பார்த்து செய்து கொடுங்கள் சார் என்று கேட்டதாகவும், அதற்கு 1ம் எதிரி முத்து நீங்கள் வேண்டும் என்றால் ரூ.3000/– யை குறைத்துக்கொண்டு ரௌண்டாக ரூ. 25 ஆயிரத்தை 4 நாட்கள் கழித்து அதாவது அரசு விடுமுறை நாட்கள் கழித்து கொண்டு வந்து கொடுங்கள் என்றும் , அந்த ரூ. 25 ஆயிரத்தை கொண்டு வந்து கொடுத்தால்தான் உங்களது உரிமையாளரின் பெயரில் தரவேண்டிய ரூ. 3,74,765/– க்கான காசோலையை தயார் செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவ்வாறு தரவில்லை என்றால் உங்களை உங்களது உரிமையாளரிடம் சொல்லி அவரிடம் இருந்து வேலை செய்யாமல் வெளியேற்றிவிடுவேன் என்றும் கராராக சொல்லிவிட்டதாகவும், இந்த தகவலை மறுநாள் 29.03.2018ம் தேதி உரிமையாளரிடம் தெரிவித்ததாகவும், அதற்கு அவர் எதிரியின் வேலையை செய்வதற்கு எதற்கு நாம் பணம் தரவேண்டும், நீங்கள் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யுங்கள் என்றும், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறியதாகவும், ஆகையால் தான் 1ம் எதிரி முத்து அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.25,000/– யை தயார் செய்துகொண்டு, நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையராக பணிபுரியும் 1ம் எதிரி மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் வாக்குமூலத்தை கொடுக்கிறேன் என்று கூறி கொடுத்த புகார் வாக்குமூலத்தை எனக்கு உதவியாக இருந்த காவலர் மூலம் அலுவலக கணினியில் புகாரை பதிவு செய்து, அந்த புகாரை பிரிண்ட் எடுத்து, சோமசுந்தரனிடம் கொடுத்து அவர் அதை படித்து பார்த்தபிறகு அவர் சொன்னபடி சரியாக இருந்ததால், அதில் கையொப்பம் இட்டு என்னிடம் கொடுத்தார். அவரை அலுவலகத்திலேயே காத்திருக்கும்படி

சொன்னேன்.

நான் அந்த புகார் மனுவை பெற்றுக்கொண்டு சென்னை ஊழல் தடுப்பு இயக்குனகரத்திற்கு மேற்படி புகார் மனுவை மின்னஞ்சல் வழியாக அனுப்பி, மேற்படி புகார் மனு மீது முதல் நிலை விசாரணை செய்ய அனுமதி பெற்று, முதல் நிலை விசாரணை செய்து முதல் நிலை விசாரணையில் 1ம் எதிரி முத்து மீதான குற்றச்சாட்டிற்கு வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததால், சென்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண் 6/2018 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன்கீழ் 1ம் எதிரி மீது அன்று மதியம் 1.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அந்த முதல் தகவல் அறிக்கையில் வாதி சோமசுந்தரனிடம் கையொப்பம் பெற்று அதன் நகல் ஒன்றை அவருக்கு வழங்கினேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 23** ஆகும்.

பின்னர் 1ம் எதிரி முத்துவை பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைக்காக தலா ஒரு அரசு சாட்சிகள் வேண்டி, முதல்வர் அரசினர் தொழில்பயிற்சி மையம், விருதுநகர் என்பவருக்கும், துணை பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் என்பவருக்கும் தொலைபேசி வழியாகவும், கடிதம் மூலமாகவும் அன்று மதியம் 2.15 மணிக்கு முன்பு என் முன்பு ஆஜராக வேண்டி வேண்டுகோள் விடுத்தேன்.

அதன்பேரில் துணைப்பதிவாளர், பொது விநியோகத்திட்ட அலுவலகத்திலிருந்து இளநிலை ஆய்வாளராக பணிபுரியும் திரு. வனத்துரை என்பவர் அன்று மதியம் 2.00 மணிக்கும், அவரை தொடர்ந்து 5 நிமிடம் கழித்து அரசினர் தொழில் பயிற்சி மையத்தில் உதவி பயிற்சி அலுவலராக பணிபுரியும் திரு. ஜஸ்டின் ஜெயக்குமார் என்பவர் மதியம் 2.05 மணிக்கும் ஆஜரானார்கள். சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து மேற்சொன்ன அரசு சாட்சிகளை

விருதுநகர் ஊ.த.க அலுவலகத்திற்கு 02.04.2018ம் தேதி மதியம் 2.15 மணியளவில் செல்லுமாறு பணித்ததற்கான அந்த **அலுவலக அதிகாரிகள் வழங்கிய உத்தரவுகள் அசாஆ 24 மற்றும் அசாஆ 25** ஆகும். அவர்களிடம் ஏற்கனவே என் முன்பு ஆஜரில் இருந்த வழக்கின் வாதி சோமசுந்தரனை வாதி என்று அவர்களுக்கும், அவர்களை வாதியிடம் அரசு சாட்சிகள் என்றும் அறிமுகம் செய்துவைத்தேன்.

பின்னர் வாதி கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை அரசு சாட்சிகளிடம் கொடுத்து, படித்து பார்க்கச்சொல்லி அவர்களுக்கு அதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், வாதியிடம் கேட்டு தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினேன். அதன்பேரில் வாதியிடம் புகாரின் உண்மைத்தன்மையை கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

பின்னர் வாதியிடம் எதிரி கேட்ட லஞ்ச பணத்தை கேட்க, அவர் அவரிடமிருந்து இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் 12 எண்ணம், 500 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணம் ஆக மொத்தம் ரூ. 25,000/- யை ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களின் எண்களை குறித்துக்கொண்டேன். பின்னர் அங்கிருந்த முதல் நிலை காவலர் திரு, பிரபாகரன் என்பவர் என்னுடைய அறிவுரையின்படி இரண்டு சுத்தமான கண்ணாடி டம்ளர்களில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். அந்த கரைசல்கள் நிறமற்று இருந்தன. பின்னர் மேற்படி ரூபாய் நோட்டுக்களை அரசு சாட்சி திரு.ஜஸ்டின் ஜெயக்குமார் என்பவரிடம் எடுத்து எண்ண செய்து, மேற்படி கரைசல்களில் அவரது வலது மற்றும் இடது கை விரல்களை தனித்தனியே மூழ்கி நனைக்க சொன்னேன். அவரும் அவ்வாறே செய்ய அக்கரைசல்கள் நிறமற்று இருந்தன. மேற்படி கரைசல்களை அருகில் இருந்த வேறொரு மேஜையின் மீது வைத்துவிட்டு, அறையில் ஓடிக்கொண்டிருந்த மின்விசிறியை நிறுத்திவிட்டு, மேற்படி ரூபாய் நோட்டுக்களில் பினாப்தலின் பவுடரை காவலர் பிரபாகரனை சீராக தடவ சொன்னேன். அவ்வாறு பினாப்தலின் பவுடர் தடவப்பட்ட ரூபாய் நோட்டுக்களை

அரசு சாட்சி திரு.ஜஸ்டின் ஜெயக்குமார் என்பவரிடம் எடுத்து எண்ணச்சொல்லி, பின்னர் மேற்படி ரூபாய் நோட்டுக்களை வாதி அணிந்திருந்த சட்டையின் இடதுபக்க மேல் வெளி பாக்கெட்டில் வேறு பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்தபின் வைக்கச்சொன்னேன். அவரும் அவ்வாறு உறுதி செய்தபின் மேற்படி பினாப்தலின் பவுடர் தடவப்பட்ட ரூபாய் நோட்டுக்களை பாக்கெட்டினுள் வைத்தார்.

பின்னர் அரசு சாட்சி ஜஸ்டின் ஜெயக்குமார் அவர்களை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த சோடியம் கார்பனேட் கரைசல்களில் அவரது வலது மற்றும் இடது கை விரல்களை மூழ்கி நனைக்க சொன்னேன். அப்போது கரைசல்கள் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. இவ்வாறு இந்த சோதனையின் முக்கியத்துவத்தை வாதிக்கும் அரசு சாட்சிகளுக்கும் விளக்கினேன்.

பின்னர் வாதியிடம் மேற்படி பணம் மற்றும் அரசு சாட்சி வனத்துரையுடன் 1ம் எதிரி பணிபுரியும் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, 1ம் எதிரியை சந்தித்து, கூடுதல் காப்புத்தொகை வேண்டி உங்களது உரிமையாளர் பெயரில் நீங்கள் கொடுத்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்க வேண்டும் என்றும், அப்போது 1ம் எதிரி லஞ்சப்பணம் கேட்டால் மட்டுமே, தாங்களும் விரும்பினால் மட்டுமே மேற்படி பணத்தை எடுத்துக்கொடுக்குமாறும், அவ்வாறு மேற்படி பணத்தை 1ம் எதிரி கேட்டு பெற்றுக்கொண்டால், தாங்கள் அரசு சாட்சி வனத்துரையுடன் அந்த அலுவலகத்தை விட்டு வெளியே வந்து, தங்களது இடது கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரத்தை வலது கைக்கு மாற்றி கட்டி, சைகை செய்யுமாறு அறிவுரை கொடுத்தேன். மேலும் வாதிக்கு, தாங்கள் அரசு சாட்சி வனத்துரையுடன் சென்று 1ம் எதிரியை சந்திக்கும்போது, 1ம் எதிரி அரசு சாட்சியை பார்த்து யார் என்று கேட்டால் சமயோகிதமாக பதில் சொல்லுமாறு வாதிக்கும் அரசு சாட்சிக்கும் அறிவுரை கொடுத்தேன்.

அரசு சாட்சி வனத்துரைக்கு வாதியுடன் சென்று வாதிக்கும் 1ம் எதிரிக்கும் இடையே நடக்கும் உரையாடல்களையும் , சம்பவங்களையும் பார்த்தும் கேட்டும்

தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். மற்றொரு அரசு சாட்சி ஜஸ்டின் ஜெயக்குமார் என்பவரை என்னுடன் இருக்குமாறு அறிவுரை கொடுத்தேன்.

மேற்படி கரைசல்களை கொட்டி அழித்தேன். பினாப்தலின் பவுடரை அலுவலகத்திலேயே வைத்தேன். இந்த சோதனையில் கலந்து கொண்ட அரசு சாட்சிகள் வாதி, காவலர் ஆகியோர்கள் என்னுடைய அறிவுரைப்படி தங்கள் கைகளை நன்கு கழுவிக்கொண்டார்கள். பினாப்தலின் சோதனையில் ஈடுபட்ட காவலர் பிரபாகரனை அலுவலகத்திலேயே அலுவலகப்பணி கொடுத்து இருக்கச்செய்தேன். இந்த சம்பவங்கள் தொடர்பாக அன்று மதியம் 2.15 மணி முதல் 3.00 மணி வரை காவலர் உதவியுடன் அலுவலக கணினியில் ஒப்படைப்பு மகஜர் ஒன்றை தயார் செய்தேன். அந்த ஒப்படைப்பு மகஜரில் வாதி, அரசு சாட்சிகள், மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். நான் தயார் செய்த ஒப்படைப்பு மகஜர் அசாஆ 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்படைப்பு மகஜர், வாதி கொடுத்த புகார், புகாரின் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை காவலர் மூலம் கனம் முதன்மை குற்றவியல் நீதிமன்றம், திருவில்லிபுத்தூர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். அந்த ஒப்படைப்பு மகஜரை தொடர்ந்து மதியம் 3.15 மணியளவில் வாதி, அரசு சாட்சிகள், மற்றும் குழுவினருடன் அரசு நான்கு சக்கர வாகனம் மற்றும் இரு சக்கர வாகனங்களில் என்னுடைய அலுவலகத்தை விட்டு புறப்பட்டு 1ம் எதிரி பணிபுரியும் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் மெயின் ரோட்டின் வலது ஓரமாக மாலை சுமார் 4.00 மணியளவில் சென்று வாகனத்தை நிறுத்தினேன். பின்னர் வாகனத்திலிருந்து வாதியையும், அரசு சாட்சி வனத்துரையையும் இறங்க செய்து அவர்களுக்கு ஏற்கனவே அலுவலத்தில் வைத்து கொடுத்த அறிவுரைகளை மீண்டும் நினைவுபடுத்தி 1ம் எதிரியை சந்திக்க சொல்லி அனுப்பிவைத்தேன்.

வாதியும், அரசு சாட்சியும் 1ம் எதிரி பணிபுரியும் அலுவலகத்திற்குள்

சென்றார்கள். நான், அரசு சாட்சி ஜஸ்டின் ஜெயக்குமார் மற்றும் குழுவினருடன் அருப்புக்கோட்டை அலுவலக வளாகத்திற்குள் ஆங்காங்கே மறைவாக நின்று கொண்டு வாதியின் சைகைக்காக காத்திருந்தேன். மாலை சுமார் 4.40 மணியளவில் வாதி, அரசு சாட்சி வனத்துரையுடன் 1ம் எதிரியின் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து 1ம் எதிரி லஞ்ச பணத்தை கேட்டு பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அவரது இடது கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை வலது கைக்கு மாற்றிகட்டி சைகை செய்தார். உடன் நான், அரசு சாட்சி ஜஸ்டின் ஜெயக்குமார் மற்றும் குழுவினருடன் அவர்களை நெருங்கி, மறைவான இடத்திற்கு அழைத்து சென்று, முதலில் வாதியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவர் தான், அரசு சாட்சி வனத்துரையுடன் 1ம் எதிரி பணிபுரியும் அலுவலகத்திற்குள் சென்று பார்த்தபோது, அங்கு அவர் இல்லாமல் இருந்ததாகவும், ஆகையால் அவரது அலுவலகத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த அருப்புக்கோட்டை நகராட்சியின் ஓட்டுநராக பணிபுரியும் திரு.முகமது உசேன் என்பவர் தன்னிடம் நகராட்சி பொறியாளர் திரு. முத்து அவர்கள் அலுவலகவளாகத்திற்குள் உள்ள அரசு குடியிருப்பிற்கு சென்றிருப்பதாகவும், சற்று நேரத்தில் வந்துவிடுவார் என்றும் கூறியதாகவும், ஆகையால் தான், அரசு சாட்சி வனத்துரையுடன் அங்கேயே காத்திருந்ததாகவும், 10 நிமிடம் கழித்து மேற்படி 1ம் எதிரி முத்து அலுவலகத்திற்குள் வந்து, அவரது இருக்கையில் அமர்ந்ததாகவும், பின்னர் தான், அரசு சாட்சி வனத்துரையுடன் சென்று தான் கொடுத்த கூடுதல் காப்புத்தொகை விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டதாகவும், அப்போது அவர் தன்னுடன் வந்த அரசு சாட்சியை பார்த்து யார் என்று கேட்டதாகவும், அதற்கு தான் தனது உறவினர் என்றும், சும்மா தன்னுடன் வந்திருப்பதாக கூறியதாகவும், பின்னர் தன்னிடம் தான் கேட்ட ரூ. 25 ஆயிரம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டதாகவும், உடனே தான் கொண்டு வந்திருப்பதாக கூறி மேற்படி பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட பணத்தை எடுத்து கொடுத்ததாகவும், அப்போது அவர் அதை

பெற்றுக்கொள்ளாமல் ஏதேட்சயாக 1ம் எதிரியின் அலுவலகத்திற்கு வந்த 2ம் எதிரி தியாகராஜனை 1ம் எதிரி அவரது அலுவலக அறைக்குள் அழைத்து, அவரிடம் மேற்படி வாதியிடம் கேட்ட ரூ.25 ஆயிரம் பணத்தை கொடுக்கச்சொன்னதாகவும், அவ்வாறு கொடுப்பதற்கு முன்பு 1ம் எதிரி 2ம் எதிரியிடம் வாதி கொண்டுவந்துள்ள லஞ்ச பணத்தை பற்றியும், அந்த லஞ்ச பணத்தை பெற்று வைத்துக்கொண்டு, பிறகு தன்னிடம் தாருங்கள் என்று 1ம் எதிரி கூறியதாகவும், அதனால் வாதி மேற்படி பணத்தை 2ம் எதிரியிடம் கொடுத்ததாகவும், 2ம் எதிரி அந்த பணத்தை அவரது வலது கையால் வாங்கி, இரண்டு கைகளாலும் எண்ணிப்பார்த்துவிட்டு 1ம் எதிரி கேட்ட பணம் இருப்பதை உறுதி செய்து, அதனை 1ம் எதிரியிடம் தெரிவித்துவிட்டு தான் அணிந்திருந்த பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்துக்கொண்டதாகவும், உடன் 1ம் எதிரி 2ம் எதிரியிடம் வாதியின் உரிமையாளர் தொடர்புடைய கூடுதல் காப்புத்தொகை ரூ. 3,74,765/- க்கான காசோலையை தயார் செய்து நாளை என்னிடம் வந்து கையொப்பம் பெற்று அவர் வருவார் அவரிடம் கொடுத்துவிடுமாறும், வாதியிடமும் நீங்கள் நாளை வந்து உங்கள் உரிமையாளருக்கான காசோலையை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும், அதன்பிறகு உங்கள் உரிமையாளரை அழைத்து வந்து, காசோலை அடிக்கட்டை உட்பட உள்ள ஆவணங்களில் கையொப்பம் இட்டு செல்லுங்கள் என்றும் கூறி, அனுப்பி வைத்ததாகவும், ஆகையால், தான் அரசு சாட்சி வனத்துரையுடன் அவ்வலுகத்தை விட்டு வெளியே வந்து, சைகை செய்ததாக கூறினார். உடன் வாதியுடன் சென்ற அரசு சாட்சி வனத்துரையிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவரும் வாதி கூறியது போன்றுதான் நடந்தது என்று கூறினார்.

அதன் பின்னர் நான், காவலர் மற்றும் சாட்சிகள், புகார்தாரர் அனைவரும் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். உள்ளே சென்றதும் வாதி சோமசுந்தரன், கிழக்கு பார்த்து இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த 1ம் எதிரியை அடையாளம் காண்பித்து இவர்தான் தன்னிடம் கூடுதல் காப்புத்தொகையை காசோலையாக தயார்

செய்து வழங்க லஞ்ச பணம் கேட்டு, அந்த லஞ்ச பணத்தை அவருக்கு எதிரே நிற்கும் தற்போது கணக்கர் திரு.தியாகராஜனிடம் கொடுக்கச்சொன்ன நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையாளர் திரு.முத்து என்றும், எதிரே நிற்கும் 2ம் எதிரியை காண்பித்து இவர்தான் அருப்புக்கோட்டை நகராட்சி கணக்காளர் திரு. தியாகராஜன் என்றும், அவர்தான் 1ம் எதிரி சொன்னதன் பேரில் என்னிடம் இருந்து லஞ்ச பணத்தை பெற்று அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருக்கும் திரு. தியாகராஜன் என்றும் அடையாளம் காண்பித்தார். உடன் வாதியை திரும்ப அழைக்கும்போது வந்தால் போதும் என்று கூறி , அவரை அனுப்பிவைத்தேன்.

பின்னர் மேற்படி 1, மற்றும் 2ம் எதிரிகளிடம் தன்னையும் அரசு சாட்சிகள் உட்பட உள்ள குழுவினரையும் அறிமுகம் செய்தேன். உடனே அவர்கள் பதற்றமடைந்தனர். அவர்களை ஆசுவாசப்படுத்தி 1ம் எதிரியை அவரது இருக்கையிலும், 2ம் எதிரியை தனியாக ஒரு இருக்கையிலும் அமர வைத்துவிட்டு, குழுவில் உள்ள ஒரு காவலரிடம் இரண்டு சுத்தமான கண்ணாடி டம்ளர்களில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்ய சொன்னேன். அந்த கரைசல்களில் 2ம் எதிரியின் வலது மற்றும் இடது கை விரல்களை தனித்தனியே மூழ்கி நனைக்கச்செய்தேன். அந்த கரைசல்கள் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. மேற்படி கரைசல்களை 180 மிலி கொள்ளவு கொண்ட இரண்டு பாட்டில்களில் தனித்தனியே ஊற்றி, மூடி ஊ.த.க. சீல் வைத்து, அதில் வழக்கின் குற்ற எண் விபரம் மற்றும் 2ம் எதிரியின் விபரம், வலது, இடது கைவிரல்கள் கழுவப்பட்ட கரைசல் அடங்கிய விபரம் ஆகியவற்றை குறிப்பிட்டு லேபிள் தயார் செய்து அதில் ஒட்டினேன். அந்த லேபிளில் நானும், அரசு சாட்சிகள் மற்றும் 2ம் எதிரி ஆகியோர்கள் கையொப்பம் இட்டோம். மேற்படி கரைசல்கள் அடங்கிய பாட்டில்களை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி கரைசல் பாட்டில்கள் சா.பொ. 2 வரிசை யாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 2ம் எதிரி தியாகராஜனிடம் வாதி சோமசுந்தரனிடம் இருந்து பெற்ற லஞ்ச பணம் குறித்து கேட்க, அதற்கு அவர் அணிந்திருந்த சாம்பல் நிற பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து, கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சி ஜஸ்டின் ஜெயக்குமாரை எடுக்கச்சொல்லி எண்ணிப்பார்த்து, அன்று மதியம் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து, தயார் செய்யப்பட்ட

ஒப்படைப்பு மகஜருடன் மேற்படி ரூபாய் நோட்டுக்களின் எண்களை ஒப்பிட்டு பார்க்க அவைகள் ஒன்றாக இருந்தன. பின்னர் மேற்படி பணம் ரூ. 25,000/- யை விசாரணைக்காக கைப்பற்றினேன். பணம் சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 2ம் எதிரிக்கு மாற்று பேண்ட் கொடுத்து அவர் அணிந்திருந்த பேண்ட்டை அவரிடமிருந்து பெற்று, அந்த பேண்ட்டில் லஞ்ச பணம் வைத்திருந்த பாக்கெட்டின் உள்பகுதியை ஒரு காவலர் மூலம் மற்றொரு சுத்தமான கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்து, அந்த கரைசலினுள் அரசு சாட்சி முன்னிலையில் மூழ்கி நனைக்க அக்கரைசலும் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. மேற்படி கரைசலையையும் 180 மிலி கொள்ளவு கொண்ட ஒரு பாட்டிலில் ஊற்றி, மூடி ஊ.த.க. சீல் வைத்து, அதில் வழக்கின் குற்ற எண் விபரம் மற்றும் 2ம் எதிரியின் விபரம், பேண்ட் பாக்கெட்டின் உள்பகுதி கழுவப்பட்ட கரைசல் அடங்கிய விபரம் ஆகியவற்றை குறிப்பிட்டு லேபிள் தயார் செய்து அதில் ஒட்டினேன். அந்த லேபிளில் நானும், அரசு சாட்சிகள் மற்றும் 2ம் எதிரி ஆகியோர்கள் கையொப்பம் இட்டோம். மேற்படி கரைசல் அடங்கிய பாட்டிலையும் , லஞ்ச பணம் வைத்திருந்த எதிரி அணிந்திருந்த சாம்பல் நிற பேண்ட்டையும் விசாரணைக்காக கைப்பற்றினேன். சாம்பல் நிற பேண்ட் சா.பொ. 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 2ம் எதிரியிடம் வாதி சோமசுந்தரனிடம் லஞ்ச பணம் பெற்றீர்களா என்றும், எதற்காக பெற்றீர்கள் என்றும் கேட்க, அதற்கு அவர் பணம் பெற்றதை ஒப்புக்கொண்டு 1ம் எதிரி சொன்னதன் பேரில் தான் பெற்றேன் சார் என்றும், எதேட்சையாக 1ம் எதிரியை சந்திக்க வந்தபோது, எனக்குத் தெரிந்த வாதி சோமசுந்தரனும் உள்ளே இருந்தார் சார் என்றும், அப்போது 1ம் எதிரிதான் தன்னிடம் வாதியின் உரிமையாளரின் பெயரில் கூடுதல் காப்புத்தொகை ரூ. 3,74,765/- க்கான காசோலையை தயார் செய்து கொடுப்பதற்காக அவரிடம் ரூ. 25 ஆயிரம் கேட்டிருந்ததாகவும், அந்த பணத்தை தற்போது அவரிடம் கொடுக்க கொண்டுவந்துள்ளதாகவும், அந்த பணத்தை பெற்று வைத்துக்கொண்டு பிறகு தன்னிடம் தாருங்கள் என்றும், 1ம் எதிரி தன்னிடம் கூறியதாகவும், மேலும், வாதியின் உரிமையாளர் பெயருக்கு தயார் செய்யவேண்டிய காசோலையை தயார் செய்து, நாளை

அவரிடம் வந்து கையொப்பம் பெற்று, வாதியிடம் கொடுத்துவிடுங்கள் என்றும் கூறியதாகவும், ஆகையால் வாதி கொடுத்த பணத்தை தான் பெற்று தான் அணிந்திருந்த பேண்டின் இடதுபக்க பாக்கெட்டினுள் வைத்துக்கொண்டு மேற்படி பணத்தை உறுதி செய்து அதனை 1ம் எதிரியிடம் தெரியபடுத்தியதாகவும், அவ்வாறு 1ம் எதிரி சொன்னதன் பேரில் பெற்றது தவறுதான் சார் என்றும் கூறினார்.

பின்னர் 1ம் எதிரியிடம், தாங்கள் வாதியிடம் கேட்ட பணத்தை 2ம் எதிரியிடம் பெற்று வைத்திருக்கச்சொன்னீர்களா என்று கேட்க, அதற்கு 1ம் எதிரி ஆமாம் சார் தப்புதான் சார், வாதியிடமிருந்து தான் நேரடியாக அந்த ரூ, 25 ஆயிரம் பணத்தை பெறவில்லை என்று கூறினார். பின்னர் 1ம் எதிரியிடம் வாதியின் உரிமையாளர் திரு.சுப்பா ரெட்டியார் பெயரில் செய்த பணிக்குரிய கோப்பு, அளவீட்டு புத்தகம், கூடுதல் காப்புத் தொகை கேட்டு கொடுத்த விண்ணப்பக்கோப்பு, நகராட்சி பொறியாளர் பிரிவு வருகை பதிவேடு, தற்செயல் விடுப்பு பதிவேடு ஆகிய பதிவேடுகளை பற்றி கேட்க, அதற்கு அவர் மேற்படி கோப்பு மற்றும் பதிவேடுகளை அவருக்கு கீழ் பணிபுரியும நகராட்சி உதவி பொறியாளர் திருமதி. காளீஸ்வரி அவர்களை அழைத்து, அவரிடமிருந்து வாதி சோமசுந்தரனின் உரிமையாளர் திரு.சுப்பாரெட்டியார் பெயரில் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் செய்த பணிக்குரிய அலுவலக கோப்பு, அதனுடன் கூடிய மேற்படி பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் காப்புத்தொகையை திரும்ப பெற வாதி திரு.சோமசுந்தரன் அவரது உரிமையாளர் பெயரில் கொடுத்த விண்ணப்பம், அருப்புக்கோட்டை நகராட்சி சொத்தாக்க பதிவேடு 2014 – 2015, கூடுதல் காப்புத் தொகை பதிவேடு 2014 2015, அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு வருகை பதிவேடு 2018 ஆகியவற்றை ஆஜர் செய்தார். **அந்த விண்ணப்பம் அடங்கிய அலுவலக கோப்பு அசாஆ 26** ஆகும். அவற்றை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

பின்னர் 1ம் எதிரி திரு. முத்து நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையாளர் பி குரூப் அலுவலர் என்பதால், கைது நடவடிக்கை மேற்கொள்ள விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தேன். அதன்பேரில் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சீனிவாச பெருமாள் அவர்கள் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் வந்து, அரசு சாட்சிகள், 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி ஆகியோர்களை விசாரித்து, 1ம் எதிரியை

கைதுக்கான காரணம் கூறி அன்று மாலை 6.00 மணிக்கும், 2ம் எதிரியை கைதுக்கான காரணம் கூறி அன்று மாலை 6.15 மணிக்கும் கைது செய்தார்.

பின்னர் மேற்படி சம்பவம் தொடர்பாக, அன்று மாலை 5.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை காவலர் உதவியுடன் அலுவலக மடிக்கணினியில் கைப்பற்றுதல் மகஜர் ஒன்றை தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அனைத்து பக்கங்களிலும் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் இட்டோம். கடைசி பக்கத்தில் எதிரிகளை கைது செய்ததற்காக காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.சீனிவாச பெருமாள் அவர்கள் கையொப்பம் இட்டார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ 6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அசாஆ 7 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் நானும் அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம்.

பின்னர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் இவ்வழக்கின் எதிரிகளின் வீட்டினை சோதனை செய்ய முன் தகவல் கடிதத்தை திருவில்லிபுத்தூர் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துவிட்டு, அரசு சாட்சிகள் முன்னிலையில் முதலில் அருப்புக்கோட்டையில் உள்ள 2ம் எதிரியின் வீட்டினையும், பின்னர் திருவில்லிபுத்தூரில் உள்ள 1ம் எதிரியின் வீட்டினையும் சோதனை செய்தோம். சோதனையின் போது, எந்த விதமான பொருட்களையும் கைப்பற்றவில்லை. மேற்படி வீட்டின் சோதனை செய்ததற்காக காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.சீனிவாச பெருமாள் அவர்களால் சோதனை ஜாபிதா மற்றும் சோதனை குறிப்புகள் தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்படி சோதனை ஜாபிதா அசாஆ 9 மற்றும் அசாஆ 10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் பொறி வைப்பு நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ரூ. 25 ஆயிரம் பணம், கரைசல்கள் அடங்கிய பாட்டில்கள் – 3, 2ம் எதிரி லஞ்ச பணம் பெற்று வைத்திருந்த அவர் அணிந்திருந்த சாம்பல் நிற பேண்ட் ஆகியவற்றை படிவம் 91 மூலம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த படிவம் 91 அசாஆ 27** ஆகும். பின்னர் உத்தரவின் பேரில் மேல் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை

காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சீனிவாச பெருமாள் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார் மனுவானது வாதியிடமிருந்து சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நான் சொன்னது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் அரசு தரப்பு சாட்சிகளான வனத்துரை, ஜஸ்டின் ஜெயக்குமார் ஆகியோர்களை அறிமுகப்படுத்தியதாகவும், வாதியிடமிருந்து வழக்கு விபரங்களை தெரிவித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகாரின் பேரில் விசாரணை செய்து அன்றைய தினம் மாலை சுமார் 4.00 மணியளவில் அருப்புகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்றதாகவும், அங்கு வாதியுடன் அரசு தரப்பு சாட்சியை 1ம் எதிரியை பார்க்க அனுப்பியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் 1ம் எதிரி கேட்ட பணம் ரூ. 25 ஆயிரம் கொண்டுவந்ததாகவும் அரசு தரப்பு சாட்சிகள் முன்பு கேட்டதாகவும் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.